M SUNIL RAJA
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by M SUNIL RAJA
Location: Shencottah
Date: 2023.09.12 16:44:31 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
...
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC 126 /2014**

Deposition of the witness for Prosecution **PW** 6

Name : திருமதி.சரோஜா
Father's/Husband's Name : ஐயப்பன்
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (12-09-2023).

(1 வது எதிரி ஆஜர். 2 வது, 4 வது, 5 வது எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு –317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

1. நான் முன்பு திருநெல்வேலியில் குடியிருந்தேன். தற்போது நல்லூரில் குடியிருக்கிறேன். சாட்சி தங்கம் எனது உடன்பிறந்த சகோதரி வள்ளியம்மாளின் மகள் ஆவார். ஆஜர் ஒன்றாவது எதிரி சின்னதுரை தங்கத்தின் கணவர் ஆவார். மற்ற எதிரிகளையும் தெரியும். நான் திருநெல்வேலியில் முன்பு குடியிருந்தபோது எதிரி சின்னத்துரை தங்கத்தை கூட்டிக்கொண்டு சென்று விட்டார். கேட்டுப் பார்த்த பின்னரும் எதிரி சின்னதுரை தங்கத்தை வேறு ஊருக்கு கூட்டிக் கொண்டு சென்று தாலி கட்டி விட்டார். மேற்படி எனது அக்கா மகள் தங்கத்திற்கு முதல் வருடம் பொங்கல் படி கொடுத்தார்கள். அப்போதுதான் நான் பார்க்க போயிருந்தேன். அதன் பின்பு நான் போனது இல்லை. சாட்சி தங்கத்திற்கு இரண்டாவது குழந்தை பிறந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. நான் அப்போது திருநெல்வேலியில் இருந்தேன். அடிக்கடி அவர்களுக்குள் சண்டை என்று சொல்லி கேள்வி பட்டுள்ளேன். வேறு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. சாட்சி தங்கம் இரண்டாவதாக கருவுற்றிருந்தபோது நீங்கள் அவரை சென்று

பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் மேற்படி பார்க்க சென்றபோது எதிரி சின்னதுரை குடிபோதையில் இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் ஆமாம். தென்காசியில் விசாரிக்கும் போது சொன்னேன். எதிரி சாட்சி தங்கத்தை அடித்ததாகவும் அதனை நீங்கள் போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் ஆமாம். அதனை நீங்கள் நேரில் பார்த்தீர்களா என்றால் ஆமாம். நான் அங்கு இருக்கும்போது அதனை நேரில் பார்த்தேன். எதிரிகள் சாட்சி தங்கத்தை அடித்து ரூபாய் ஒரு லட்சம் பணமும், 25 பவுன் நகையும் கொண்டு வந்தால் தான் சேர்ந்து வாழ முடியும் என கூறியதாக கூறியுள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இது தொடர்பாக தங்கம் புகார் கொடுத்து போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் என்னை கேட்கவில்லை. மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் நீங்கள் சொல்லிவிட்டு, தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. கீழப்புதூர் ஊரில் நடந்த சம்பவங்கள் எதுவும் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நல்லூரில் வந்து எதிரி சின்னதுரை சண்டை போட்ட விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். அவர் குடித்திருந்தாரா, எப்போது குடித்தார், எந்த நேரத்தில் குடித்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நல்லூரில் எதிரி குடித்துவிட்டு சண்டை போட்டதாக ஆலங்குளத்தில் புகார் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், அவ்வாறு நடந்திருந்தால் புகார் கொடுத்திருப்பார்கள் என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் சாட்சி வள்ளியம்மாளின் உடன்பிறந்த சகோதரி என்பதாலும், நீங்கள் சாட்சி தங்கத்தின் உறவினர் என்பதாலும் நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.<br>sd/-M.Sunil Raja,<br>District Munsif cum Judicial Magistrate, Shenkottai |

(sd/- S.M., Typist) **-True copy-**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC 126 /2014**

Deposition of the witness for Prosecution **PW** 5

Name : திரு.மணிகண்டன்
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (12-09-2023).

(1 வது எதிரி ஆஜர். 2 வது, 4 வது, 5 வது எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

1. நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் முதல் எதிரி சின்னதுரை என்பவரை தெரியும். அவர் எனது தங்கை தங்கம் என்பவரின் கணவர் ஆவார். இந்த வழக்கின் மற்ற எதிரிகளான சமீனா, சாமி, காளியம்மாள் மற்றும் கருப்பாயி ஆகியோரையும் தெரியும். அவர்கள் உறவினர்கள் தான். 2008 ஆம் ஆண்டு போல் சரியாக எனக்கு தேதி ஞாபகம் இல்லை. எனது தங்கையை எதிரி சின்னதுரை தான் காதலித்து இருவரும் காதலித்து எதிரி சின்னதுரை தான் எனது தங்கையை கூட்டிக்கொண்டு போனார். நான் தனியாக கல்யாணம் முடித்து தனியாக சென்று விட்டேன். அதனால் தங்கையுடன் பேச்சுவார்த்தை கிடையாது.

2. தற்போது எனது தங்கை நல்லூரில் குடியிருந்து வருகிறார். சுமார் 18 வருடங்கள் இருக்கும். எனது தங்கை சண்டை ஏற்பட்டு வந்துவிட்டார். திரும்பவும் போனார். அதன் பின்னர் மீண்டும் சண்டை ஏற்பட்டு வந்து விட்டாள். எதற்காக சண்டை போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

3. ஒன்றாவது எதிரி சின்னதுரை உங்கள் தங்கையை காதல் திருமணம் செய்துவிட்டு திருமணம் நடந்த சில மாதங்களிலேயே குடித்துவிட்டு அடித்து கொடுமை செய்ததாக உங்களுக்கு தகவல் கொடுத்தார்களா என்றால் ஆமாம். நான் கேள்விப்பட்டேன். நீங்கள் உங்கள் மாமாவிடம் சொல்லி எதிரியை சண்டை போடக்கூடாது என சத்தம் போட்டு உள்ளீர்களா என்றால் இல்லை. 10.12.2006 ஆம் தேதி திருமணம் உங்கள் தங்கைக்கும், ஒன்றாவது எதிரிக்கும் நடந்து அவர்கள் உங்கள் தங்கையின் மாமா சாமியுடன் ஒன்றாக கூட்டு குடும்பமாக இருந்தாரா என்றால் தெரியாது. உங்கள் தங்கைக்கு குழந்தை பிறந்த பின்னர் ஒன்றாவது எதிரி சமீனா என்ற பெண்ணுடன் கள்ள தொடர்பு வைத்திருந்ததாக கூறியுள்ளீர்களா என்றால் ஆமாம். இரண்டாவது குழந்தை பிறந்த பின்னர்தான் ஒன்றாவது எதிரி வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார்.

4. மேற்படி பெண்ணுடன் சேர்ந்து கொண்டு எதிரி உங்கள் தங்கையை கொடுமை செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் தங்கைக்கு இரண்டாவது குழந்தை பிறந்த பின்னர் எதிரி மேற்படி குழந்தையை வந்து பார்க்கவில்லை என கூறி உள்ளீர்களா என்றால் ஆமாம். அவர் வரவில்லை. உங்கள் தங்கையை எதிரிகள் எல்லாம் சேர்ந்து கொண்டு உங்கள் தங்கை எதுவும் கொண்டு வரவில்லை. அதனால், உங்கள் தங்கை தேவையில்லை என அவர்கள் விரட்டி விட்டதாகவும், சேர்ந்து வாழ வேண்டும் என்றால் ரூபாய் ஒரு லட்சம் பணமும், 25 பவுன் நகையும் கொண்டு வர வேண்டும் என்று கேட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் தங்கையை எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படிச் சொன்ன விவரங்களை நீங்கள் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்கள் என்றும், தற்போது அதற்கு மாறாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

5. கீழப்புதூர் ஊரில் உங்கள் தங்கை திருமணம் செய்த பின்னர் குடியிருந்தபோது அங்கு என்ன நடந்தது என்ற விவரம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். உங்கள் தங்கையோ, உங்கள் தங்கை அவருடன் உங்கள் தாயாருடனும் ஊர் நாட்டான்மையுடன் வந்து பேச்சுவார்த்தை ஏதாவது பேசினார்களா என்று உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். நீங்கள் எதிலும் கலந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். திருமணம் நடந்து கொஞ்ச நாளிலேயே உங்கள் தங்கை கணவர் வீட்டில் இருந்து பிரிந்து உங்கள் ஊருக்கு வந்தாரா என்றால் இல்லை. இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் தான் வந்தார் என்று நினைக்கிறேன்.

6. அதன்பின்னர் எதிரி சின்னதுரை ஊர்க்காரர்களை வைத்து பேசி, உங்கள் ஊரில் வந்து உங்கள் தங்கையை அழைத்துக் கொண்டு திரும்ப வந்தார் என்றால் இல்லை. உங்கள் ஊர்க்காரர்களை அழைத்துக் கொண்டு உங்கள் தங்கை மற்றும் அம்மா யாரும் எதிரி சின்ன துரையின் ஊரில் வந்து பேசவில்லை என்றால் ஆமாம். அதன் பின்பு எப்படி இரண்டாவது குழந்தைக்காக உங்கள் தங்கை எதிரியின் வீட்டிற்கு வந்தார் என்றால் எனது அம்மா சத்தம் போட்டதால் எனது தங்கை மீண்டும் எதிரில் சின்னத்துரையின் வீட்டிற்கு சென்றார். உங்கள் தங்கை வேண்டுமென்றே பிரிந்து வந்து விட்டார் என்று தான் உங்கள் அம்மா சத்தம் போட்டு அனுப்பி வைத்தார்கள் என்று சொன்னால் ஆமாம். அடிக்கடி சண்டை போட்டுவிட்டு உங்கள் தங்கை நல்லூருக்கு உங்கள் அம்மா வீட்டிற்கு வந்து விடுவார் என்றால் இல்லை.

7. எதிரிகள் நகை, பணம் கேட்டதாக உங்கள் தங்கை சொல்லியுள்ளது பொய் என்றும், எதிரிகள் அவ்வாறு எதையும் கேட்கவில்லை என்றும், உங்கள் சகோதரி வேண்டுமென்று எதிரி சின்னத்துரையை புறக்கணித்து அவரது விருப்பத்திற்கு நல்லூரில் வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், எதிரி இரண்டாவது திருமணம் செய்வதற்கு முன்பே உங்கள் தங்கையுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்தார் என்றும், ஆனால், உங்கள் தங்கை வரவில்லை என்பதால் எதிரி சின்னதுரை மனம் வெறுத்து இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றும், அதன் பின்னரும் உங்கள் தங்கை எதிரி சின்னதுரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்று

புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதனால் அவரது விருப்பம் வழியே இருந்து கொண்டார் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

sd/-M.Sunil Raja,
District Munsif cum Judicial Magistrate, Shenkottai

(sd/- S.M., Typist)

**-True copy-**